பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 01 2025 6 30
செவ்வாய்க்கிழமை மாலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தனிநபர் மின்னணு தகவல் பாதுகாப்புக்கான வரைவு விதிமுறைகள் ஆக்கப்பூர்வமான பலன்களை தரும் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.
- ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.
- பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனம் தொடர்பான புதிய விதிமுறைகள் மாநிலங்களின் உரிமையை பாதிக்கும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலையை ஆளும் திமுக அரசு பராமரிக்க தவறிவிட்டதாக பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் கூறியுள்ளார்.
- சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*----- இனி விரிவான செய்திகள் ---*</u>

[]<<<>>>[]

தனிநபர் மின்னணு தகவல் பாதுகாப்புக்கான வரைவு விதிமுறைகள் மக்கள் சார்ந்த அரசு நிர்வாகத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

இந்த புதிய விதிமுறைகள் தொடர்பாக மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் அளித்த சமூவ வலைதளப் பதிவுக்கு பதில் தெரிவித்துள்ள பிரதமர், நாட்டின் உள்ளார்ந்த வளர்ச்சிக்கு தனிப்பட்ட நபர்களின் மின்னணு தகவல் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் கொண்டு வந்துள்ள புதிய விதிமுறைகள் ஆக்கப்பூர்வமான பலன்களை அளிக்கும் என்ற அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வரைவு விதிமுறைகள் தொடர்பாக அனைத்து தரப்பினரிடமும் கருத்துக்களைப் பெறுவதற்கு மத்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது.

mygov தளத்தில் இம்மாதம் 18-ஆம் தேதி வரை தனிநபர் மின்னணு தகவல்கள் பாதுகாப்பு விதிமுறைகள் குறித்த கருத்துக்களை பதிவிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கான இடைத்தேர்தல் அடுத்த மாதம் ஐந்தாம் தேதி நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்த தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார் இந்த இடைத்தேர்தலுக்கான அறிவிக்கை இம்மாதம் பத்தாம் தேதி வெளியிடப்படும் என்று கூறினார்.

அன்றைய தினம் வேட்புமனு தாக்கல் தொடங்கப்படும் என்றும், இம்மாதம் 17-ஆம் தேதி வரை மனுக்களை தாக்கல் செய்யலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கு அடுத்த நாள் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

வேட்புமனுக்களை திரும்பப்பெற இம்மாதம் 20-ஆம் தேதி கடைசி நாளாகும்.

வாக்கு எண்ணிக்கை அடுத்த மாதம் அடுத்த மாதம் எட்டாம் தேதி நடைபெறும் என்றும் திரு ராஜீவ்குமார் அறிவித்தார்.

ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி உறுப்பினர் ஈ வி கே எஸ் இளங்கோவன் காலமானதை அடுத்து, இந்த தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

[]<<<>>>[]

பல்கலைக்கழக துணைவேந்தர் நியமனம் தொடர்பாக பல்கலைக்கழக மானியக் குழு கொண்டு வந்துள்ள புதிய விதிமுறைகள் மாநில உரிமைகளையும், கூட்டாட்சி தத்துவத்தையும் பாதிக்கும் என்று முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில் துணைவேந்தர்கள் நியமனத்தில் ஆளுநர்களுக்கு பரந்த அதிகாரங்களை வழங்குவது, கல்வி புலம் சாராதவரும் துணைவேந்தர் ஆகலாம் என்ற விதிமுறைகள் மாநில உரிமைகளை பாதிக்கும் என்று கூறியுள்ளார்.

பல்கலைக்கழக மானியக் குழு வகுத்துள்ள புதிய விதிமுறைகள் அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிராக உள்ளதாகவும், சட்டரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் மாநில அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்றும் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

தேசிய தேர்வு முகமையால் நடத்த திட்டமிடப்பட்டுள்ள UGC - NET தேர்வு தேதிகளை மாற்றியமைக்க வேண்டும் என முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதானுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாட்டின் முக்கிய பண்டிகையான பொங்கல் பண்டிகை வரும் 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதிவரை கொண்டாடப்படவிருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே 13-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதிவரை நடத்துவதாக அறிவிக்கப்பட்டுள்ள யுஜிசி, நெட் மற்றும் பிற தேர்வுகளை வேறு தேதிகளில் மாற்றியமைக்க வேண்டுமென்று திரு மு க ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

தமிழகத்தில் பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் மாணவ மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்வது குறித்த ஆய்வுக் கூட்டம் அத்துறைக்கான அமைச்சர் திரு கோ வி செழியன் தலைமையில் இன்று சென்னையில் நடைபெற்றது.

சென்னையில் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த விரும்பத்தகாத சம்பவத்தை அடுத்து மாநிலம் முழுவதும் உள்ள கல்வி நிறுவனங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், கண்காணிப்பையும் தீவிரப்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் இக்கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இரவு நேரங்களில் மின் விளக்குகள், கண்காணிப்பு கேமராக்கள் செயல்படுவதை உறுதி செய்ய வேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

கல்வி நிறுவன வளாகத்திற்குள் வருபவர்கள் குறித்தும், அவர்கள் வெளியே செல்லும் தகவல் குறித்தும் உரிய பதிவேடுகளில் பதிவு செய்யப்பட வேண்டுமென்றும்,. மாணவர்கள் ஆசிரியர்கள் என அனைவரும் அடையாள அட்டை அணிந்திருக்க வேண்டியது அவசியம் என்றும் இக்கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

[]<<<>>>[]

எச் எம் பி வி வீரியம் குறைந்த வைரஸ் என்றும், இது குறித்து பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்றும் மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று இது தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாநில சுகாதாரத்துறை மத்திய சுகாதாரத்துறை மற்றும் உலக சுகாதார நிறுவனம் போன்ற அமைப்புகளுடன் தொடர்பில் இருந்து வருவதாகவும், இது குறித்த தகவல்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

சளி காய்ச்சல் ஏற்பட்ட ஒரு சிலருக்கு எச் எம் பி வி வைரஸ் தாக்கம் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும், இதற்கென தனியான சிகிச்சை எதுவும் தேவையில்லை என்றும் திரு மா சுப்ரமணியன் தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட — மா சு ) -23-- செகண்ட்*

[]<<<>>>[]

நீலகிரி மாவட்டத்தில் எச் எம் பி வி வைரஸ் தொற்று அதிகரித்தால் சுற்றுலா பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்ற மாவட்ட ஆட்சியர் திருமதி லஷ்மி பாவ்யா தெரிவித்துள்ளார்.

உதகையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் இந்த வைரஸ் இருந்தாலோ, சாதாரண காய்ச்சல் இருந்தாலோ முகக்கவசம் அணிந்து வருமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

பொங்கல் தொடர் விடுமுறையின்போது அண்டை மாநிலங்களிலிருந்து சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருவதை கருத்தில் கொண்டு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் திருமதி லஷ்மி பவ்யா தெரிவித்துள்ளார்.

*( சவுண்ட்பைட் - லஷ்மி பவ்யா ) -35--- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு நிலையை ஆளும் திமுக அரசு பராமரிக்க தவறிவிட்டதாக பிஜேபி மூத்த தலைவர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன் கூறியுள்ளார்.

கோவை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நியாயமான காரணங்களுக்காக எதிர்க்கட்சிகள் ஜனநாயக முறையில் போராட்டம் நடத்துவதற்கு மாநில அரசு அனுமதி மறுப்பதாகத் தெரிவித்தார்.

மாநில ஆளுநர் ஒரு சில கோரிக்கையை முன் வைக்கும்போது அதனை நிராகரித்துவிட்டு அவருக்கு எதிராகவே ஆளும் கட்சியினர் போராட்டம் நடத்துவதற்கு தமிழக அரசு அனுமதி அளிப்பதகாவும் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜ் குற்றம்சாட்டினார்.

[]<<<>>>[]

சுற்றுலாத் தலமான கன்னியாகுமரியில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வரும் 15, 16, 17 ஆகிய மூன்று நாட்களுக்கு சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் திருவள்ளுவர் சிலைக்கு செல்லும் சுற்றுலா படகுகள் தினசரி கூடுதலாக ஐந்து மணி நேரம் இயக்கப்படும் என பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

சேலம் மாவட்டத்தில் நாட்டுப்புறக் கலையை மீட்டெடுக்கும் வகையில் சேலத்தில் நடைபெற்ற கலைத் திருவிழாவில் இண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நாட்டுப்புற கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

[]<<<>>>[]

மயிலாடுதுறை மாவட்டத்தில் போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணி மாணவர்களின் சிலம்பாட்டம், நாட்டுப்புற கலைஞர்களின் பறைஇசை மற்றும் கிராமிய நடனத்துடன் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

தருமபுரி மாவட்டத்தில் உள்ள மலைப்பகுதிகள் மற்றும் ஊரகப் பகுதிகளில் உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலை தலைமை ஆசிரியர்களுக்கான இணையவழி ஆலோசனைக் கூட்டம் ஆட்சியர் திருமதி சாந்தி தலைமையில் இன்று நடைபெற்றது.

[]<<<>>>[]

சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

தாய்லாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்த இணை தாய்லாந்தின் Thantub – Pawit sornlaksup இணையை 7-6, 6-4 என்ற செட் கணக்கில் வென்றது.

[]<<<>>>[]

லக்னோவில் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான 18 வயதுக்கு உட்பட்டோருக்கான ஜூனியர் Handball சாம்பியன் போட்டியின் இறுதி ஆட்டத்தில் உஸ்பெக்கிஸ்தான் பட்டத்தை வென்றது.

*End of News*